நல்லவைகளை வரவேற்று – அல்லவைகளை சுட்டிக்காட்ட வேண்டும் என்பதுதான் எதிர்க்கட்சியினர் கடமை!

# கடந்த ஆட்சியின் சிறப்பான திட்டங்களுக்கு வேறுவடிவம் பூசி வெளிப்படுத்தி இருக்கிறீர்கள்!

## சட்டப்பேரவையில் ஆளுநர் உரை மீதான விவாதத்தில் முன்னாள் அமைச்சர் சா.சி.சிவசங்கர் பேச்சு!

சென்னை, ஜூன்.21-

**சட்டப்பேரவையில் ஆளுநர் உரை மீதான விவாதத்தில் முன்னாள் அமைச்சர் சா.சி.சிவசங்கர் பேசுகையில் ஏற்கனவே இருந்த ஆட்சிகளில் எவையெல்லாம் சிறப்பாக இருந்ததோ அதை எடுத்துப்போட்டு அதற்கு வேறு வடிவம் பூசி இன்றைக்கு வெளிப்படுத்த விரும்புகிறீர்கள் என்று குறிப்பிட்டார்.**



இதுகுறித்து முன்னாள் அமைச்சர் சா.சி. சிவசங்கர் பேசியதாவது :-

பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். இருள் படிந்த தமிழகத்தை விழிப்புறச்செய்த தந்தை பெரியார் அவர்களையும், எளிய மக்களை அரசியலுக்கு கொண்டுவந்த பேரறிஞர் அண்ணா அவர்களையும் வணங்குகிறேன்.

இன்றைக்கு இந்தியாவில் சிறந்த மாநிலம் தமிழ்நாடு என்று சொல்லக்கூடிய அளவுக்கு தமிழ்நாட்டை வடிவமைத்த நவீன சிற்பி, எங்கள் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) சமீபத்தில், நடைபெற்ற நிதி ஆயோக் கூட்டத்தில் இன்றைய முதல்வர் அவர்கள் பேசும்போது, இந்தியாவின் இரண்டாவது பொருளாதார மாநிலமாக தமிழ்நாடு இருக்கிறது என பெருமிதமாக குறிப்பிடுவதற்கு காரணமாக இருந்த திராவிட மாடல் முதல்வர், (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழகத்திற்கு பல்வேறு நலதிட்டங்களை வழங்கிய எங்கள் மகத்தான தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு என்னுடைய வணக்கத்தை தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி தமிழகத்தில் விளையாட்டுத் துறை திரும்பிப் பார்க்கப்படாமல் இருந்ததை திரும்பிப் பார்க்க வைத்து, தமிழகத்திற்கு புதிய சிறப்புத் திட்டங்களை செயல்படுத்திய எங்களது இளம் தலைவர், இன்றைய எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மூன்றாவது முறையாக என்னை வெற்றி பெற வைத்த குன்னம் சட்டமன்றத் தொகுதியினுடைய வாக்காளர் பெருமக்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். என்னுடைய வெற்றிக்கு உழைத்த கூட்டணிக் கட்சித் தலைவர்களுக்கு, நான் எப்போதும் நன்றி மறவாதவன், எனவே அவர்களுக்கும் இந்த நேரத்தில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த ஆளுநர் உரையில் நேற்றைக்கு நடைபெற்ற அந்த சம்பவங்களே இந்த அரசு எப்படி போகப் போகிறது. என்பதை எடுத்துக்காட்டு இருக்கிறது. ஆளுநர் உரையை நிறைவு செய்த ஆளுநர் அவர்கள், மிகுந்த வாஞ்சையோடு ஒரு தகவலை பதிவிட்டிருக்கிறார். தமிழகத்தில் ஒரு வரலாறு நிகழ்வு நடைபெற்றிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார். இந்த அவையில், கடந்த மூன்று நான்கு ஆண்டுகளாக ஆளுநராக இருந்த ஆர். என். ரவி அவர்கள் வருகைத் தந்து, ஆளுநர் உரைக்கு உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்வதை பார்த்திருக்கிறோம். ஆனால், ஆளுநரே வெளிநடப்பு செய்த பெருமைக்குரிய ஆர்.என். ரவி அவர்கள். இந்த அவையில் வைத்த குற்றச்சாட்டு, கடந்த திராவிட மாடல் அரசு தேசிய கீதத்தை முதலில் ஒலிக்கவில்லை என்பதுதான். இந்த அரசு, நீங்கள் எடுத்திருக்கின்ற நடவடிக்கைகள்.

**மாநில உரிமைகளுக்கான உரத்த குரலாக ஒலிப்பது தமிழ்நாடுதான்!**

சா.சி. சிவசங்கர்: பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் ஒரு மூத்த அரசியல் தலைவர், உங்களுக்கு தெரியாத வரலாறு கிடையாது. மாநில உரிமைகளுக்கான உரத்த குரலாக இன்றைக்கும் ஒலிப்பது தமிழ்நாடு தான். அது முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் காலமாக இருந்தாலும், எங்களுடைய திராவிட மாடல் முதல்வர் தளபதி அவர்கள் இருந்த காலமாக இருந்தாலும், இன்னும் சொல்லப்போனால்,

நீங்கள் தலைவராக ஏற்றுக்கொண்டிருந்த மறைந்த மரியாதைக்குரிய அம்மையார் அவர்களுடைய காலத்திலும் மாநில உரிமைகளுக்கான குரல் வலுத்து ஒலித்ததுதான் இந்த சட்டமன்றம்.

எனவேதான், அந்த மாநில உரிமைகளுக்காக தொடர்ந்து நாங்கள் குரல் கொடுக்கிறோம். தமிழ்த்தாய் வாழ்த்தை முதலில் பாட வேண்டும், அவை நிறைவின்போதுதான் தேசிய கீதம் பாட வேண்டுமென்கின்ற மரபு தமிழ்நாட்டிலே கடைபிடிக்கப்பட்டு வருவது. இது ஏதோ அவைக்கு மாத்திரமல்ல, நீங்களும் நானும் பள்ளியில் படிக்கும்போதும், அங்கேயும் இந்த நிகழ்வுதான் நடைபெற்றது என்பதை உங்களுக்கு நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

எந்த அரசு நிகழ்ச்சியாக இருந்தாலும் முதலில் தமிழ்த்தாய் வாழ்த்து, நிகழ்வுகளுக்கு பிறகு தேசிய கீதம். நேற்றைக்கு தேசிய கீதம் இரு முறை ஒலிக்கப்படுகிறது. அதற்காக ஆளுநர் நன்றி சொல்கிறார். ஆளுநர் இணக்கமாக அவையை நடத்திக் கொடுத்தார் என்று அவைத் தலைவர் நீங்கள் நன்றி சொல்கிறீர்கள். உங்கள் இருவருக்குமான அந்த இணக்கம்தான் நாங்கள் கடந்த காலத்தில் சொன்னதை இன்றைக்கு வெளிப்படுத்தியிருக்கிறது. அதைத்தான் நேற்றைக்கு எங்கள் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் சுட்டிக்காட்டினார்கள்.

உங்கள் இணக்கம் எதுவரை செல்லப்போகிறது, எப்படி வெளிப்பட போகிறது என்பதையெல்லாம் நாங்கள் அறிந்திருக்கிறோம்; உங்கள் கூட்டணியில் இருக்கின்ற தோழர்களும் அறிந்திருக்கிறார்கள்.

**தாய்மொழி தமிழை நாம் காத்திருக்கிறோம்!**

ஆறு ஓடுகிறது, காட்டாற்று வெள்ளம் வரும்போது, அதனால் பாதகம் ஏற்படக் கூடாது என்பதற்காகத்தான் ஆங்காங்கே அணை கட்டப்படுகிறது. கட்டப்படுகிற அணையிலே ஒரு சிறிய நீர்கசிவுதான் இருக்கிறது என்று நீங்கள் சொல்கிறீர்கள். அந்த நீர்கசிவை விட்டால் ஒரு செங்கல் உருவப்படும், புழப்புழயாக உருவப்படும், வெள்ளம் உள்ளே போகும். அப்படி போகாமல் தமிழ்நாடு காத்த காரணத்தினால் தான், இன்றைக்கு தாய்மொழி தமிழை நாம் காத்திருக்கிறோம். இலகுவாக, இன்னொரு மொழிதான் என்று ஏற்றுக்கொண்ட காரணத்தினால்தான் மற்ற மாநிலங்களில் தாய்மொழியை இழந்திருக்கிறார்கள். மகாராஷ்டிராவில் இன்றைக்கு மராத்தியே காணப்படவில்லை, இந்திதான் நிறைந்திருக்கிறது. இவ்வாறு அவர்கள் மெல்ல விட்டார்கள். அது பொத்தமாக உள்ளே நுழைந்தது. உங்களுக்குத் தெரிந்த ஓர் உதாரணத்தை சொல்கிறேன், ஒரு கூடாரத்திலே.

பொதுப் பணி மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் உங்கள் கொள்கையும், எங்கள் கொள்கையும் ஒன்றுதான். நீங்கள் செய்ததைத்தான் நாங்கள் செய்கிறோம் என்று சொன்னார்கள். ஆளுநர் உரையும் அப்படித்தான் இருந்தது.

உங்களுக்கு புரிகிற மாதிரி சொல்ல வேண்டுமென்றால், ஒரு படத்திற்கு trailer மிக முக்கியம். நேற்று உங்கள் trailer எப்படி இருந்தது என்றால், ஏற்கெனவே திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்தபோது எதையெல்லாம் சொன்னதோ, அதையெல்லாம் தான் நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். மொத்தம் 57 பத்திகள். அறிமுகத்திலேயே 30 பத்திகள், ஒன்றிய அரசை அன்போடு, பண்போடு வலியுறுத்துவதற்கு 4 பத்திகள், நிறைவு செய்வதற்கு 4 பத்திகள் போய்விட்டன. இவையெல்லாம் போக மீதியிருப்பதிலே நீட் தேர்வு எதிர்ப்பு,

மும்மொழி கொள்கை எதிர்ப்பு, இருமொழி கொள்கையைப் பின்பற்றுவோம், மீனவர் பிரச்சினைக்கு ஒன்றிய அரசை அணுகுவோம் இவைகளெல்லாம் ஏற்கெனவே திராவிட முன்னேற்றக் கழக அரசு இருந்தபோது எதையெல்லாம் செய்ததோ அவைகளைத்தான் வேறு வார்த்தைகளை உபயோகித்திருக்கிறீர்கள். அதைத்தான் செய்ய முடியும். ஏனென்றால், தமிழ்நாட்டினுடைய உரிமையைப் பாதுகாப்பதற்கு என்றென்றும் திராவிட முன்னேற்றக் கழகம் எடுத்து வைத்திருக்கின்ற அடித்தளம்தான் (மேசையைத் தட்டும் ஒலி) என்றைக்கும், யாரும் நின்று பேசுவதற்கு உதவும் என்பது தான். அதைத்தான் பொதுப் பணி மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். அவருக்கு என்னுடைய பாராட்டுக்கள்.

**சிங்கப்பெண் திட்டம்: வாகனத்திற்கு புதிய ஸ்டிக்கர்!**

இதிலே, புதிய திட்டங்கள் என்று மூன்று, நான்கு விஷயங்களைச் சொல்லியிருக்கிறீர்கள். ஏற்கெனவே, கடந்த கால ஆட்சிகளில் நடைபெற்றதையெல்லாம் ஒப்பிட்டு பார்ப்பவர்களுக்கு தெரியும். ஒவ்வொரு ஆட்சி அமைகின்றபோதும், கூடுதல் எண்ணிக்கையில் இருக்கும் மதுக் கடை ஒரு நடைமுறை, அதைச் செய்திருக்கிறீர்கள். போதைப் பொருள் தடுப்பு என்பது எந்த அரசாக இருந்தாலும் செய்யும் ஒரு காரியம். அனைத்து ஆட்சிக் காலத்திலும் அதற்காக எவ்வளவு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன, எத்தனை வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன என்பதெல்லாம் தெரியும். ஒரே ஒரு புதுமையான விஷயம் "சிங்கப் பெண் சிறப்பு அதிரடிப்படை" திட்டம். உங்களுடைய தேர்தல் அறிக்கையிலே சொல்லப்பட்ட திட்டத்தைக் கொண்டுவந்துள்ளீர்கள். அதுகூட பெரிய புதிய திட்டமல்ல. Uniform-ஐ மாற்றி, வாகனத்திற்கு புதிய sticker-ஐ ஒட்டி, இன்றைக்கு கொண்டு வந்திருக்கிறீர்கள். முழுமையாக அந்தத் திட்டத்தைச் செயல்படுத்தும்போதுதான் அதனுடைய வெற்றி எல்லாம் தெரியும். இப்படி தொடங்கக்கூடிய படம் 5 ஆண்டு காலத்திற்கு எப்படி இருக்கும் என்பதற்கான இந்த trailer-ல் பொதுமக்கள் எதிர்ப்பார்த்த எதுவும் இன்னும்

இடம்பெறவில்லை என்பதுதான் உங்களுக்கான செய்தி. ஒரு trailer hit அடிக்க வேண்டுமென்றால், மிக crisp ஆக இருக்க வேண்டும். ஆனால், நேற்று எதுவுமே crisp ஆக இல்லை, அனைத்தும் வதவதவென்று பழைய விஷயங்களை வார்த்தைகளை மாற்றி உபயோகித்துச் சொல்லியிருக்கிறீர்கள். இந்த வார்த்தை விளையாட்டு எங்களுக்குத் தெரியாது என்று எனக்கு முன்பு சகோதரர் பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் அடுக்குமொழி பற்றியெல்லாம் பேசினார். அடுக்குமொழி பேசியவர் அண்ணா. நீங்கள் அவரையும்தான் ஏற்றுக்கொண்டுள்ளீர்கள், கிண்டல் செய்கின்றபோது, மற்றவர்களை விமர்சனம் செய்கின்றபோது, யாரைப் பற்றிப் பேசுகிறோம் என்பதை கவனித்து பேச வேண்டும். திராவிட முன்னேற்றக் கழகத்தை மாத்திரமல்ல, நீங்கள் கொள்கைவைரமாக ஏற்றுக்கொண்டுள்ளவர்களையும் சேர்த்துதான் சில சமயங்களில் விமர்சித்துக் கொண்டிருக்கிறீர்கள் என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

அதேபோல, ஒரு வரலாற்றுச் செய்தியை அவர் அறியாமல் இங்கே பதிவு செய்தார். பொதுத் தொகுதியிலே ஒரு தலித் வேட்பாளரை நிறுத்தி வெற்றி பெறச் செய்தோம் என்று கூறினார். கோயம்புத்தூருக்குச் சென்று சி.டி. தண்டபாணி யார் என்று கேளுங்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக சட்டமன்ற உறுப்பினராக அவர் எங்கே வெற்றி பெற்றார் என்று கேளுங்கள். அ.தி.மு.க.-வில் தலித் எழில்மலை அவர்கள் நாடாளுமன்ற உறுப்பினராக வெற்றி பெற்றிருக்கிறார். அவர் எந்தத் தொகுதியில் நின்று வெற்றி பெற்றார். என்று கேளுங்கள். நீங்கள் reference எடுத்துக் கொண்டு வந்து பேசுகிறீர்கள். நாங்கள் reference எடுத்துக் கொண்டு வந்து பேச வேண்டிய அவசியம் எங்களுக்கு இல்லை. நாங்களெல்லாம் திராவிடப் பல்கலைக் கழகத்தில் பயின்றவர்கள். முத்தமிழறிஞர் கலைஞரிடத்திலே பயின்றவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த விளக்கத்திற்கெல்லாம் நாங்கள் விளக்கம் கொடுக்க ஆரம்பித்தால், நீங்கள் பேசிய எதுவுமே முழுமை பெறாது. நீங்கள் பேசிய எதுவும் உண்மையில்லை என்றுதான் சொல்ல வேண்டிவரும். ஒரு ஆட்சி அமைகின்றபோது, இந்த ஆட்சி இந்த நோக்கத்திற்காக அமைந்திருக்கிறது. இந்த நோக்கத்திற்காக நாங்கள் செயல்படுவோம், இந்தத் திட்டங்களை நாங்கள் செயல்படுத்துவோம் என்று சொல்ல வேண்டும்.

**அட்லி பட உதாரணம்!**

ஆனால், கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், இன்னும் அதற்கு மிகச் சிறந்த உதாரணம் சொல்ல வேண்டுமென்றால், எங்களுடைய முதலமைச்சர், முதலமைச்சராக பொறுப்பேற்ற பிறகு அவர்கள் சொன்ன வார்த்தை தமிழ்நாட்டினுடைய பொருளாதாரத்தை One Trillion Dollar பொருளாதாரமாக உயர்த்துவோம் என்று சொன்னார்கள். இன்றைக்கு நீங்கள் அதை பட்டி, tinkering பார்த்து 1.5 Trillion Dollar என்று சொல்லி இருக்கிறீர்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மனதிற்கு மிக நெருக்கமானவர் இயக்குநர் அட்லி. அவர் எடுத்த படம் முழுவதும் பார்த்தீர்களென்றால், பல சிறந்த திரைப்படங்களில் இருக்கின்ற காட்சிகளை எடுத்து போட்டு, hit கொடுப்பார். நீங்களும் அப்படிதான். ஏற்கெனவே இருந்த ஆட்சிகளில் எவையெல்லாம் சிறப்பாக இருந்ததோ அதை எடுத்துப் போட்டு அதற்கு வேறு வடிவம் பூசி இன்றைக்கு வெளிப்படுத்த விரும்புகிறீர்கள். ஒரு ஆட்சி என்பது மக்களுக்கான ஆட்சியாக இருக்க வேண்டும். மக்களைப் பாதுகாக்கின்ற ஆட்சியாக இருக்க வேண்டும்.

இந்த ஆட்சி பொறுப்பேற்ற பிறகு எதிர்க்கட்சிகள் நாங்கள் விமர்சனம் செய்யக் கூடாது என்று நீங்கள் சொல்கிறீர்கள். எங்களுடைய கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 6 மாத காலத்திற்கு நாங்கள் விமர்சனம் செய்யவில்லை அது புதிய திட்டங்களை நீங்கள் தீட்டுவதற்கும். என்று சொன்னார்.

அதை செயல்படுத்துவதற்குமான கால அவகாசம். ஆனால், சட்டம்–ஒழுங்கை பாதுகாப்பதிலும், தற்போது மக்களுக்கு இருக்கின்ற பிரச்சினைகளை, அவ்வப்போது நிகழ்கின்ற பிரச்சினைகளை தீர்ப்பதெற்கெல்லாம் 6 மாத கால அவகாசம் என்பது கிடையவே கிடையாது. இன்றைக்கும் சொல்ல வேண்டுமென்றால், நாங்களெல்லாம் போராட்டக் களத்திற்கு வரவில்லை. உங்கள் கூட்டணிக் கட்சியில் இருக்கிறவர்கள் போராட்டம் அறிவித்திருக்கிறார்கள். போராட்டக் களத்தில் நிற்பது மக்கள். கோவையில் போராட்டம் செய்தவர்கள் மக்கள். கும்மிடிப்பூண்டியில் பாலியல் பிரச்சினைக்கு போராட்டம் செய்தவர்கள் மக்கள். இப்படி திக்கெட்டும், திசையெட்டும் எங்கெல்லாம் எந்த மக்கள் உங்களை தேர்ந்தெடுத்தார்கள் என்று சொன்னீர்களோ அந்த மக்கள்தான் இப்போது போராட்டம் செய்து கொண்டிருக்கிறார்கள். எனவே, அந்தப் போராட்டங்களுக்கு தீர்வு காண்பதற்கு இந்த அரசு என்ன செய்யப் போகிறது என்ற கேள்வி, அதற்கான பதில் எதுவும் இந்த ஆளுநர் உரையில் இல்லை.

இந்த ஆளுநர் உரை என்பது உங்களுக்கும், ஒன்றிய அரசுக்கும் இணக்கமான உறவு ஏற்பட்டிருக்கிறது என்பதை பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் சொன்னதும் வெளிப்பாடாகத் தான் அமைந்திருக்கிறது. இது பூனைக்குட்டி வெளியே வந்திருக்கிறது என்பதற்கான செய்தி. இதனுடைய முழு வெளிப்பாடு வெளிவருகிறபோதுதான் உங்களை நம்பியவர்கள், உங்களுக்கு வாக்களித்தவர்கள் இதுகுறித்து பேசுகின்ற நிலை வரும். அந்த நிலை வருவதற்கு முன்பு நீங்கள், பேரவைத் தலைவர் அவர்கள் அனுமதித்தாலும், அண்ணன் கே.செங்கோட்டையன் அவர்கள் ஆளுநரைப் பற்றிக் கூட பேசக் கூடாது என்று சொல்கிறார்கள். ஆளுநர் என்ற வார்த்தையையே அவைக் குறிப்புக்கு மாறானதா? எத்தனை முறை நீங்கள் சட்டமன்ற உறுப்பினர், எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினராக இருந்தபோது நீங்கள் எல்லோரையும் விமர்சனம் செய்திருக்கிறீர்கள். கடும் விமர்சனம் செய்திருக்கிறீர்கள்.

**மேகதாது தீர்மானத்திற்கு தி.மு.க. ஆதரவு!**

ஒரு ஆட்சி அமைகின்றபொழுது அந்த ஆட்சிக்கு உறுதுணையாக இருப்பதற்குதான் இன்றைக்கு மேகதாது பிரச்சினையில் நீங்கள் கொண்டு வந்திருக்கிற தீர்மானத்தை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக எங்கள் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் வரவேற்றிருக்கின்றார்கள். நல்லவைகளை வரவேற்போம், அல்லவைகளை சுட்டிக்காட்ட வேண்டும். இது தான் சட்டமன்றத்தில் எதிர்க்கட்சியின் கடமை.

உங்களுக்கும், எங்களுக்குமான வாக்கு வித்தியாசம் 17 இலட்சம் தான். எங்களையும் இந்த மக்கள் நம்பித் தான் வாக்களித்திருக்கிறார்கள். எனவே, அவர்களுடைய குரலாக, அவர்களுடைய குரலை இங்கு ஒலிக்கின்றவர்களாக நாங்கள் இருக்க வேண்டிய எங்களுடைய கடப்பாட்டை நாங்கள் செய்வோம். அவையெல்லாம் அவை மரபுக்கு மாறானது என்று-- கடந்த 2011-2016 ஆட்சியில் நான் பேசியதெல்லாம் கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள் நியாபகம் வைத்திருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். அவர் அன்றைக்கு இருந்தபோது எப்படி பேசினாரோ அதே தொனியில் இப்போது பேசுகிறார். காலங்கள் மாறும், உங்கள் காட்சிகள் மாறும். எல்லாவற்றையும் நீங்கள் பார்த்தவர், ரசித்தவர். எனவே, அதற்கு தகுந்தபடி பேச வேண்டுமென்று உங்களுக்கு அன்பான வேண்டுகோள்.

அட்லியை பற்றி மட்டுமல்ல, Put Chutney-யைப் பற்றியும் பேசினார்கள். நான் உங்களையும் follow செய்கிறேன். அனைவரையும் follow செய்தால்தான் அரசியலில் இருக்க முடியும்; சட்டமன்றத்தில் விவாதிக்க முடியும். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்த் துறையில் மாபெரும் புரட்சியை ஏற்படுத்தியவர், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், பராசக்தி திரைப்படத்தில் அன்றைக்கு பேசப்பட்ட வசனம்தான் இன்றைக்கு எல்லோராலும், எல்லா இடங்களிலும் பேசப்படுகிறது. எனவே, திரைப்படத்தினை ரசிப்பதையும், அதில் இருக்கின்ற நல்ல செய்திகளை எடுத்துக்கொள்வதும் தவறல்ல; இது வார்த்தை விளையாட்டல்ல; அவை நடவடிக்கை என்பது பொதுமக்கள் கவனித்துக் கொண்டிருக்கின்ற நடவடிக்கையாகும். வரலாற்றில் இடம்பெறக்கூடிய செய்திகளைக் கொண்ட நடவடிக்கையாகும். இந்த அவையில் நான் ஏற்கனவே பேசியிருக்கின்ற பேச்சுகளை நீங்கள் சிறிது கவனித்துப் பார்த்தீர்களானால் தெரியும். மேலும், எதிர்காலத்தில் உங்களுக்கு சுவையான செய்திகளை சொல்வேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆளுநர் உரை என்பது, உங்களுக்கு உவப்பானதாக இருக்கலாம்; தமிழ்நாட்டு மக்களுக்கு உவப்பானதல்ல; அவர்கள் எதிர்பார்த்தது வேறு; அவர்கள் எதிர்பார்த்தது. கோயம்புத்தூர் மாவட்டத்தில் ஒரு பெண்மணி கதறும்போது சொன்னார்களே, நாங்கள் உங்களை action hero என்று நம்பினோம் என்று. மக்கள் ஒரு Action Film-ஐ எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். அது செய்யக்கூடியதல்ல என்பது எங்களுக்குத் தெரியும். காரணம், எதிர்க்கட்சி மேடையிலிருந்து பேசுகின்ற வசனம் வேறு.

ஆளுங்கட்சியாக வந்து நிற்கின்றபோது, செயல்படுத்துவது என்பது வேறு. அவற்றையெல்லாம் பொறுப்போடு உணர்ந்த காரணத்தினால் தான், நாங்கள் மேலும் சில விஷயங்களைப் பேசாமல், இந்த அவையில் பொதுக் கூட்ட மேடைகளில் பேசியவற்றிற்கெல்லாம் பதில் சொல்லாமல் தவிர்க்கிறோம், சட்டமன்றப் பேரவையில் எவற்றை பேச வேண்டுமோ, அவற்றை மட்டும் பேசுகிறோம். அப்படி அவை தேவையைவுணர்ந்து எதிர்காலத்தில் அவற்றை பேசுகின்ற சூழ்நிலையை நீங்கள் ஏற்படுத்த வேண்டாம் என்றும், ஆக்கப்பூர்வமான ஆட்சியைத் தருவதற்கு எந்தப் பணி இருக்கின்றனவோ அந்தப் பணிகளைப் பாருங்கள் என்று கூறி, வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

**எங்கள் கூட்டணி வாக்குகளால்தான் ஆட்சி தாங்கி நிற்கிறது!**

மருத்துவம், மருத்துவக் கல்வி மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கூறிய கருத்துகள் சரி தான்.

நீங்கள் தேர்தலில் தனியாக நின்று பெற்ற வாக்குகள்தான். ஆனால், எங்களோடு கூட்டணியில் இருந்து வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றவர்கள் தான் இன்று உங்களுடைய ஆட்சியைத் தாங்கி நிற்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) "வரும் காலத்திலும், நாங்கள் தனியாக நிற்போம்; தனியாக வாக்குகளைப் பெறுவோம்" என்று நீங்கள் சொல்லத் தயாரா? இவ்வாறு விவாதித்தால் அந்த விவாதம் எங்கு சென்று முடியும் என்பதை நீங்கள் தயவுசெய்து ஆழ்ந்து சிந்தித்து பதிலளிக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு சா.சி. சிவசங்கர் உரையாற்றினார்.

**நீட் தேர்வை திணிக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து - சென்னையில் ஜூன் 23-ல் கழக மாணவர் அணி சார்பில் ஆர்ப்பாட்டம்! அலை அலையாய் பங்கேற்பீர்!**